**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 47-2025**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW 2 | | | Examined as : PW 6 | |
| Name | : | கௌரி | Defence | : |
| Father/Husband Name | : | கோபால் | Court | : |
| Village | : | விளநகர் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 72/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 24.03.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:—**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வயது முதிர்வின் காரணமாக தற்போது ஓய்வில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை 08.00 மணியளவில் நான் எனது பேரக்குழந்தைகளுடன் எனது வீட்டில் ஜபம் செய்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அவரது மனைவியை அடித்ததால் அவரது மனைவி எனது வீட்டிற்குள் வந்து நுழைந்துகொண்டார். அவரை நான் வெளியே போகும்படி சொல்லிக்கொண்டு நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி மாதவன் ஓடிவந்து என்னை திரேகம் முழுவதும் அடித்து கீழே தள்ளினார். அதில் எனக்கு சரியாக நிற்கவும், நடக்கவும் முடியவில்லை. பிறர் உதவி இல்லாமல் நடக்க இயலவில்லை. என்னை எனது மகன் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். அங்கு சரியான சிகிச்சை இல்லாததால் நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். இது சம்பந்தமாக எனது மகன் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரி என்னை எவ்வத்திலும் தாக்கவில்லை என்றாலும், தள்ள வில்லை என்றாலும் சரியல்ல. அசா1 எனது மகன் என்பதால் அவர் கொடுத்த பொய்யான

புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் மாதவனும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் உள்ள முன்விரோதத்தினால் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் எந்த முன்விரோதமும் இல்லை.

2. சம்பவம் நடந்த 8 நாட்கள் கழித்து தான் எனது மகன் புகார் கொடுத்தார் என்றால் நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலும் பின்னர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாலும் எனது மகன் என்னை கவனித்து வந்ததாலும் காலதாமதமாக புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எதிரி எந்த குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.